# கொல்வின் வாதாட வேண்டும் என சதிவழக்கு எதிரிகள் கோரிக்கை


..gistered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49
போன் 689

National Tamil Daily

மலர் 9
இதழ் 128
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆனி 5 ரபி அவ். 10 திங்கட்கிழமை [19-6-67]


கொழும்பு, ஞாயிறு

சதிவழக்கு எதிரிகளில் ஒரேயொரு எதிரியைத் தவிர மற்றவர்கள் அனைவரும் தங்கள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஆஜராக வேண்டுமெனக் கேட்டுள்ளனர்.

லங்கா சமசமாஜக்கட்சிச் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவைத் தங்கள் சார்பில் ஆஜராவதற்கு ஒழுங்கு செய்யுமாறு கேட்டுள்ளனர்.

மேஜர் ஜெனரல் உடுகம தமது சார்பில் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் ஆஜராக வேண்டுமென முன்னரே கேட்டிருந்தார். அவரது சார்பில் திரு. பீலிச்ஸ் ஆஜரானாலும் டாக்டர் கொல்வினின் உதவியும் ஆலோசனையும் அவருக்குக் கிடைக்கும்.

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்த அமுல மசோதா விவ ‹ தம்

# 2 ஆண்டுக்குள் 2 லட்சம் இந்தியர் வெளியேறுவர்

## 5¼ லட்சம் பேரும் போவதற்கு 15 ஆண்டுகள் தேவையில்லை

### செனட்டர் ஜேசுதாஸன் உரை

கொழும்பு, ஞாயிறு

சறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதா நிறைவேறி அமுலுக்கு வந்து இரண்டு ஆண்டுகளுக்குள் இரண்டு லட்சம் இந்திய வம்சாவழியினர் இந்தியாவுக்கு திரும்பிவிடுவார்கள். ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 5 லட்சத்து 25 ஆயிரம் பேருக்குச் செலாவணி வசதிகள் உடனே செய்துகொடுக்கப் படுமானல் 15 வருடம் காத்திருக்கவேண்டிய அவசியமே இல்லை. 5 ஆண்டுகளில் அவர்கள் தமிழ்நாட்டுக்குத் திரும்பிவிடுவார்கள்.

இவ்வாறு செனட்டர் ஆர். ஜேசுதாசன் இன்று செனட்சபையில் கூறினர். சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதாமீது புள்ளி விபரங்களின் உதவியுடன் விளக்கமாக தமிழில் உரை நிகழ்த்திய செனட்டர் ஜேசுதாசன், நான் தோட்டப் பகுதியில் இந்திய வம்சா வழியினர் மத்தியிலேயே பிறந்து, வளர்ந்து, படித்து, அவர்களின் பிரச்னைகளுடனேயே வாழ்க்கையை அமைத்துக்கொண்டவன் அதனுல் அவர்களின உண்மையான மனப்பான்மையை என்னுல் வெளியிடமுடியும் என்ருர.

[6-ம் பக்கம் பார்க்க]

'பண்ணைவிடுதியிலிருந்து

## அங்கவீனர்களை வெளியேற்ற வேண்டாம்'

### பிரதமருக்கும் மந்திரிகளுக்கும் மகஜர்


யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள அங்கவீனர்கள் வசிக்கும் கட்டிடத்திலிருந்து அவர்களை வெளியேற்ற வேண்டாம் எனக்கோரும் மகஜரொன்றை அரசாங்கத்துற்கு அனுப்பி வைப்பதற்காக பொதுமக்களிடம் கையெழுத்துச் சேகரிப்பதில் யாழ்ப்பாணத்திலுள்ள பல சமூக சேவைச் சங்கங்களும் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

பண்ணையிலுள்ள அங்கவினர்கள் வசிக்கும் கட்டிடத்திலிருந்து அவர்களை வெளியேற்றிவிட்டு அதை மத்திய மருந்துச்சாலையாககுவதற்கான அரசாங்கத்தின் திட்டப்படி அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன இக் கட்டிடத்தைப் பார்வையிட்டார்.

ஆரும் ஜோர்ஜ் மன்னரின்

[6-ம் பக்கம் பார்க்க]



★

## தேவாலயம்

இன்றுமாலை தென்னிந்திய கிறிஸ்தவ திருச்சபையின் யாழ்ப்பாணக் கிளையிடம் அரசாங்கம் கையளிக்கவிருக்கும் யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் கோட்டைக்குள்ளேயிருக்கும் கிறிஸ்தவ தேவாலயம் இது.

(செய்தி 2-ம் பக்கம் பார்க்க)

★

## மரண அறிவித்தல்

### திரு. த. தம்பித்துரை

யாழ்ப்பாணத்தில் பிரபல நியூஸ் ஏஜென்டும் பத்திரிகை விற்பனையாளருமான திரு. த. தம்பித்துரை அவர்கள் காலமாகிவிட்டார். இவர் திருமதி சுவக்கொழுந்துவின் அருமைக் கணவரும், துரைராசா (Law Faculty), சிவராசா, ருக்மணி, கமலமணி, பூமலர், யோகேஸ்வரி, பத்மதேவி, புஷ்பராணி, நாகேஸ்வரி, ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சண்முகபாரதி, பரராஜசிங்கம், பரமகுரு ஆகியோரின் அருமை மாமனுருமாவார். அன்னரின் பூதவுடல் இன்று (19-6-67) காலை 8-30 மணிக்கு தகனக் கிரியைக்காக இலக்கம் 11, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளியிலிருந்து கொழும்புத்துறையில் உள்ள துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

2364

சுன்னுகம் பட்டின சபை

## நகரசுத்தித் தொழிலாளர் வேலைநிறுத்தம் முடிவு

யாழ்ப்பாணம், திங்.

சென்ற பதினைந்து தினங்களாக வேலை நிறுத்தம் செய்து வந்த சுன்னுகம் பட்டினசபை நகரசுத்தித் தொழிலாளர் இன்றுவேலைக்குத் திரும்பவிருக்கின்றனர்.

வடபகுதி உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகர் முன்னிலையில் நேற்று இவ்வேலை நிறுத்தம் சம்பந்தமாக நடைபெற்ற ஒரு மகாநாட்டில் ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. ... [illegible]

[6-ம் பக்கம் பார்க்க]

## மரண அறிவித்தல்

### அ. வசிட்டன்

அரசாங்க கணக்குப் பரிசோதக இலாகாவைச் சேர்ந்த அ. வசிட்டன் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற மலாயன் பென்ஷனியரும், முன்னுள் இந்துபரிபாலனசபையின்மனேஜருமான திரு. ச. அச்சலிங்கத்தின் கடைசிப் புதல்வரும், ருக்மணி, சாரதாம்பாள், மகேஸ்வரி, சரோஜினி, ஜனகன், வியாசன் ஆகியோரின் சகோதரரும், வைத்திலிங்கம், பரராஜசிங்கம், பொன்னம்பலம், குமாரசாமி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக நல்லூர் கோவில் வடக்கு வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து செம்மணி மயானத்துக்கு இன்று மாலை 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

2366

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தீய சக்தியுடன் உடன்பாடு செய்து கொண்டோ அல்லது அதற்கு முழுவதும் விட்டுக் கொடுப்பதன் மூலமோ சமாதானத்தை விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. சமாதானத்திற்கே முரண்பட்ட முறைகளின் மூலம் சமாதானத்தைப்பேண முடியாது.

—ஜவஹர்லால்நேரு

ஈழநாடு

…nadu National Tamil Daily
…legram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 38'.

யாழ்ப்பாணம் பிலவங்கஹூ ஆனி 5 மீ௳ (19-6-67)

## நல்ல காரியம்

யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் கோட்டைக்குள்ளேயிருக்கும் கிறிஸ்தவ ஆலயத்தை தென்னிந்திய கிறிஸ்தவ திருச்சபையின் யாழ்ப்பாணக்கிளையிடம் அரசாங்கம் இன்று மாலை கையளிக்கிறது. புதைபொருளாராய்ச்சி இலாகாவின் பொறுப்பில் பல்லாண்டுகளாக இருந்து வந்த இந்தகிறிஸ்தவ ஆலயம் பொதுமக்களுக்குப் பயன்படவிருக்கிறது. இந்த நல்ல காரியத்தில் முயற்சிசெய்து வெற்றியீட்டிய தென்னிந்திய கிறிஸ்தவ திருச்சபையின் யாழ்ப்பாணக் கிளையினர் பாராட்டுக் குரியவர்கள்.

புதைபொருளாராய்சிக்குரிய இடமென வணக்கத்துக்குரிய இடங்களையும் பூட்டிவைத்து யாருக்கும் பயன்படாமல் பாழடைய வைத்திருப்பதும், புராதனச்சின்னங்கள் என இடிந்து பாழடைந்து போன தூண்களையும கற்களையும் காவல்காத்து பொதுமக்களுக்கு எவ்வித பயனுமில்லாமல் வைத்திருப்பதும் நகரத்திலைதும் நாட்டினதும் அழகைக் கெடுப்பதாகும்.

யாழ்ப்பாணம் கோட்டையினுள்ளிருக்கும் கிறிஸ்தவ ஆலயம் தென்னிந்திய கிறிஸ்தவ திருச்சபையின் யாழ்ப்பாணக்கிளையிடம் [குத்தகைக்குத்தான் என்றாலும்] ஒப்படைக்கப்படும அதே சமயம் யாழ்ப்பாணம் கோட்டையும் பொதுமக்களின் உபயோகத்துக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். பாழடைந்து இருள் படிந்து நகரின் அழகையே கெடுத்துக் கொண்டிருக்கிறது. இதுதவிர பழைய தூக்குமேடை இன்னும் காட்சியளித்து பழைய தீய சம்பவங்களை நினைவூட்டி ஒல்லாந்தர் மீதும் மற்றும் இந்நாட்டை ஆட்சிசெய்த அந்நியர் மீதும் மனக்கசப்பை வளர்த்துவிடச் செய்யும். கோட்டையையும் சீர்திருத்தி பழைய தீய செயல்களை நினைவூட்டும்சின்னங்களை அழித்து பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில் அதைப் பயன்படுத்தினல் நகருக்கும் அழகு கொடுக்கும்.

## அணு ஆயுத உற்பத்தி

'யாருக்குப்பொன்னம்பலம்கிருபை இருக்குமோ அவனே பெரியவனும்' என்று நந்தனர் பாடினராம். ஆனல் இன்று 'யாரிடம் அணுகுண்டும் அதன் அப்பன் ஹைட்ரஜன் குண்டும் இருக்கிறதோ அவனே பெரியவனும்' என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஐந்து அணுகுண்டுகளை வெற்றிகரமாகப் பரீட்சித்திருக்கும் சீன ஆருவதாக ஹைட்ரஜன் குண்டு ஒன்றையும் வெடித்துப் பரீட்சை செய்திருக்கிறது. இதன்மூலம் அணு ஆயுத வல்லரசுகளுடன தானும் ஒரு வல்லரசாக, வல்லவனக, பெரியவனக சீனவும் தலைநிமிர்த்திக்காட்டுகிறது.

அணுஆயுதங்களை வெடித்தும பரீடசை செய்வதன்மூலம் அணுக்கதிர் உலகின் பலபாகங்களுக்கும் பரவி கொடியவிஷத்தில் மக்கள் பாதிக்கப்படுவார்கள். சீன நேற்று 'ஹைட்ரஜன்' குண்டு ஒன்றை வெடித்துப் பரீட்சை செய்ததும் ஐ.நா. தலைமைக் காரியதரிசியும் மற்றும் உலக நாடுகள்பலவும் கவலையும் கண்டனமும் தெரிவித்தன. நிலத்தடிச் சோதனை நீங்கலாக அணு ஆயுத சோதனைகளைத் தடைசெய்யும் ஒப்பந்தம்ஒன்றில் சோவியத்யூனியனும் அமெரிக்காவும் மற்றும் அணு ஆயுத வல்லரசாகாதசிறிய நாடுகளும் கைச்சாத்திட்டிருக்கின்றன. ஆனல் பிரான்சும் சீனவும் அதில் கைச்சாத்திடவில்லை. அவை அணு ஆயுதங்களை உற்பத்திசெய்து பரீட்சித்து வருகின்றன. அணு ஆயுதங்களை பெருமளவில் உற்பத்திசெய்து பலப்பரீட்சைகளையும நடத்தி ஆயுதங்களைக் குவித்து வைத்துக்கொண்டு வேறு எவரும் அணு ஆயுதங்களை உற்பததி செய்யக் கூடாதென்றும் பரீட்சை செய்யக் கூடாதென்றும் சொல்வது என்ன நியாயம்?

எல்லா நாடுகளுமே அணு ஆயுதங்களை உற்பத்தி செய்தால் உலகசமாதானம் எப்படி ஏற்படமுடியும்? உலகில் சுபீட்சம் ஏற்படத்தான்வழி பிறக்குமா?

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து குவித்து வைத்துள்ள வல்லரசுகள் அந்த ஆயுதங்களை அழிக்க வேண்டும். இல்லையேல் சீனவையும் ஐ நா. வில் சேர்த்து அணு ஆயுதங்களை உற்பத்திசெய்துள்ள அத்தனை நாடுகளும்அந்த ஆயுதங்களை ஐ நா. வின் கட்டுப்பாட்டில வைத்து விடவேண்டும். அணு ஆயுத உற்பத்தி அதிகரிப்பதால் சிறிய நாடுகளுக்கே ஆபத்து அதிகரிக்கும். இலங்கை உட்பட சிறிய நாடுகள் அனைத்தும் சேர்ந்து அணுஆயுத வல்லரசுகளின் ஆயுதங்களைப் பயன்படாமல் செய்ய ஒரு வழிகாணவேண்டும். சீனவின அணுஆயுதத்தைக்கண்டு அமெரிக்காவிடம் அணுஆயுதப்பாதுகாப்புக்கேட்பதோ அமெரிக்காவின் அணு ஆயுதங்களைக்கண்டு சீனவிடம் பாதுகாப்புக் கேட்பதோ சிறியநாடுகளின் சுதந்திரத்தைப்பாதுகாப்பதற்கு சரியான வழியல்ல.

# யாழ்ப்பாணம் கோட்டையிலுள்ள ஒல்லாந்தர் கிறிஸ்தவ ஆலயம்

''யாழ்ப்பாணச் சிலுவைக் கோயில்'' என்று அக்காலத்தில் அழைக்கப்பட்ட இவ்வாலயம் 1706-ம் ஆண்டு கட்டப்பட்டதென்று அதன் வாயில் முகப்பில் காணப்பட்ட போதிலும் 1666, 1672, 1693-ம் ஆண்டுகளுக்குரிய கல்லறைகளையும் உளளே காணலாம். இதைக் கொண்டு இதே இடத்தில் முன் ஓர் ஆலயம் இருந்து அது பின்னர் இடிக்கப்பட்டதெனப் பலர் எண்ணுவர். இது சரியன்று. யாழ்ப்பாணத்தில் பல கிராமங்களில் பழைய போத்துக்கேய ஆலயங்களை ஒல்லாந்தர் தம் சபைகளுக்குத் திருத்திக் கொடுத்திருந்தனர். ஆகவே அவர்கள் போத்துக்கேய ஆலயங்களை உபயோகிக்க மனம் கூசவில்லை யென்பதைக் காணலாம். பழைய கல்லறைகள் இதற்குள்ளே வருவதற்குக் காரணம், ஒல்லாந்தர் புதிய ஆலயங்களைக் கட்டும் பொழுது, இடிக்கப்படும் பழைய ஆலயங்களில் அடக்கம் பண்ணப்பட்டோரின் சரீரங்களை அங்கே கொண்டு வந்து திருப்பி அடக்கம் செய்தமையேயாம்.

இந்த ஆலயம் கட்டப்படும் போது கௌரவ அடன் வான் டெர் டுவைன் என்பவர் யாழ்ப்பாண மாகாண அதிபராகவும், மார்ட்டினஸ் லூசாக்கம் என்பவர் கட்டட வேலைப் பொறுப்பாளியாகவுப், குருவானவர் டீ விறைஸ்ற் என்பவருடன் இன்னும ஆறுபேர் சபை அங்கத்தினர்களாகவுமிருந்தனர்.

வாசற் சுவர் நுனியில் முற்காலம் ஒரு மணி தூக்கப்பட்டிருந்தது. இதில் 'யாழ்ப்பாண அற்புத மாதாக் கோயில்' என்று போத்துக்கேய மொழியில் வரையப்பட்டுள்ளது.

உட்பிரவேசிக்கும் போது வாசற்படியிலுள்ள கல்லில் ஒல்லாந்த மொழியில் ''நித்தியம் எவ்வளவு நீண்டது'' என்று வரையப் பட்டிருக்கிறது. உள்ளே போகும் போது பல கல்லறைகளை கீழே காணலாம்.

ஆலயச் சிலுவை ரூபத்தின நடுவிலிருந்து இடது கைதொடங்கும் இடத்தில பிரசங்க பீடம இருக்கிறது. இது ஓர் இராப் போசன பாத்திரத்தின் வடிவம் கொண்டது. இதற்கு மேல் ஒலியைப் பாதுகாக்கும் படி ஒரு தட்டு தூக்கப்பட்டுள்ளது. இப் பிரசங்க பீடத்தின் கீழ் தற்போதிருக்குப் சிறிய பிரசங்க பீடம் மெதடிஸ்த சபையால் சென்ற நூற்றுண்டின் கடைசிப் பகுதியில் அளிக்கப்பட்டது. இடது பக்கத்தில் நாம் காணும் மற்றப் பெரிய பொருள் வீணை வார்த்தியப் பீடம். இதற்குப் புறம்பே தாவீது இராசன் ஒரு வாத்தியக கருவியையும் சங்கீத புத்தகத்தையும் வைத்திருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. நடுவிலிருந்து சிலுவைரூபத்தின் வலது கை தொடங்கும் இடத்திலுள்ளது மாகாண அதிபரின் ஆசனம். எல்லாச் சுவர் ஓரங்களிலும் பெரியார் இருக்கும் படி அடைக்கப்பட்ட ஆசனங்கள் நிறுவப்பட்டிருந்தன. இப்போ நற்கருணை ஆராதனைக்கு உதவும்படி நிறுவப்பட்டிருக்கும் அடைப்பும், மேடையும் பிற்காலம் ஆங்கிலேயரால் செய்யப்பட்ட ஒழுங்கு.

1795-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் யாழ்ப்பாணம் ஆங்கிலேயர் கைவசமாயிற்று ஆங்கிலேயர் ஆட்சி [illegible] களாக கோட்டை ஆலயத்தையே தாமும் உபயோகித்து வந்தனர். ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்ட சில ஆங்கிலேயருடைய கல்லறைகளையும் சின்னங்களையும் இன்னும் நாம் காணலாம். 1872 தொடங்கி நகரத்தில் தாம் கட்டின புதிய ஆலயத்தை அவர்கள் உபயோகிக்கத் தொடங்கியதால், அக்காலம் தொடக்கம் கோட்டை ஆலயம் சாதாரண ஆராதனைக்கு உபயோகிக்கப் படாமல் வந்தது.

1892 இல் ஒல்லாந்தருக்கு யாழ்ப்பாணம் கோட்டையில் ஓர் உரித்தும் இல்லாமல் செய்யுமாறு ரூபாய் 6000 கொடுத்து கொழும்பு வூல் வென்டால் சபையிடமிருந்து ஆங்கிலேயர் கோட்டை ஆலயத்தை வாங்கிக் கொண்டனர். பணி முட்டுகளுக்காக ரூபாய் 75 கொடுக்கப்பட்டது. மணிகள் இரண்டும் இறக்கப்பட்டு ஒன்று வூல்வென்டால் சபைக்கு கொடுக்கப்பட்டது. அச் சபை அதை கொழும்பிலுள்ள பரி. மைக்கேல் ஆலயத்துக்கு ரூபாய் 200க்கு விற்றது. மற்ற மணி இவ்வாலயத்திற்கே இன்னும் உரியது.

ஆங்கிலேயர் இலங்கையை ஆளும் வரை கோட்டை ஆலயம் அரசினர்க்குரிய ஏனைய பழைய கட்டடங்களைப்போல் கவனமாக பராமரிக்கப்பட்டு வந்தது. சுயஇராச்சியம் தொடங்கியபின் ஒல்லாந்தர் காலத்துக்குரிய கட்டிடம் எதுவும் அந்நிய ஆட்சியைப்பற்றி நினைப்பூட்டுமாதலின் முந்திய கவனத்தைப்பெறவில்லை. ஆகவே பொதுவாக கட்டிடமும் அதற்குரியனவெல்லாம் பழுதடையத் தொடங்கின. இதைக்கண்ட அரசினர் யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்களே இதில் கவனம் எடுப்பார்களென்று உணர்ந்து யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்துக்கு அதை 50 வருடங்களுக்கு வாடகையாகக் கொடுத்திருக்கின்றனர்.

பெரிய திருத்தங்களுக்கு ஒல்லாந்த சபைகள் பண உதவி கொடுக்குமென காத்திருக்கப்படுகிறது. சிறிய திருத்தங்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள மூன்று புரட்டஸ்காந்து குழுக்களே பொறுப்பாய் இருக்கும். ஞாயிற்றுக்கிழமை தோறும் ஓர் ஆராதனை நடக்க கிறிஸ்த ஐக்கிய சங்கம் ஒழுங்கு செய்யும்.

பல்லாண்டுகளாய் இத்துணை பிரபல்யம் வாய்ந்திருந்த இவ்வாலயம் கிறிஸ்த சாகியத்தின் வசம் வந்திருப்பதை எல்லோரும் வரவேற்பார்கள்.

இன்று மாலை 5 1/2 மணிக்கு இவ்வாலயம் உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்திடம் ஒப்புவிக்கப் படும்.

[நன்றி: யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய சங்க உத்தியோகஸ்தர்]

## மகா கும்பாபிஷேகம

சங்கானை, ஞாயிறு
சண்டிலிப்பாய் வேவிற்பதி ஹரிஹரபுத்திர ஐயனர் கோவில் மகாகும்பாபிஷேகம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஜூலை 28-ல் நடக்கவிருக்கும் மண்டலாபிஷேகத்தை முன்னிட்டுத் தற்போது கோவிலில் தினமும் பகல் 12 மணிக்கும், மாலை 6 மணிக்கும் அபிஷேக ஆராதனைகளும் திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றன.

## நாட்டிலும் நகரிலும்

பேராசிரியர்களுக்கு ஏதாவது உத்தியோகம் வேண்டுமோ இல்லையோ! அரை நிமிடம் சும்மாயிருக்க மாட்டார்கள்; ஏதாவது ஆராய்ச்சி நடத்திக்கொண்டே யிருப்பார்கள். புள்ளி விபரங்களைக் கண்டால் சிலருக்கு, அதுவும் என் போன்றவர்களுக்கு, தலையிடி சொல்லிக்கொள்ளாமல் வந்துவிடும். அவர்களோ நமது சுந்தோர் பையன் சினிமா கேள்வி, பதில்களைப் படிப்பதுபோல், புள்ளி விபரங்களுக்குள் முகத்தைப் புதைத்துவைத்துக்கொண்டு அவற்றை மனப்பாடம் செய்து, அவற்றேடு கொஞ்சி குலாவி விளையாடுவார்கள். புள்ளி விபரங்கள் கிடைக்காவிட்டால், பொடி போட்டுப் பழகியவனின் மூக்கு பொடியில்லாமல் தவிப்பது போல், தவித்து துடிப்பார்கள்.

புள்ளி விபரங்களை இப்படியெல்லாம் அலசி ஆராய்ந்து துருவித் துளைத்து, கரைத்துக் குடித்தபின் மகத்தான ஓர் அறிக்கை வெளியிடுவார்கள். அது உலகம் எங்கும் அதிர்ச்சியை உண்டுபண்ணும். விஞ்ஞானிகள் அதை வரவேற்று வியந்து போற்றுவார்கள். மனித வர்க்கத்தின் சிந்தனைப் போக்கிலேயே ஒரு பெரும் திருப்பத்தை உண்டு பண்ணும் அந்த அறிக்கை.

சமீபத்தில் ஜப்பானிய பேராசிரியர் காவாஹட்டா என்பவர் பிரமாண்டமான புள்ளி விபர ஆராய்ச்சி ஒன்றைநடாத்திவிட்டு பிரமிக்கத்தக்க ஒரு கண்டுபிடிப்பை வெளியிட்டிருக்கிருர்.

மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு உயரமாயிருக்கிருனே அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய புத்திக்கூர்மை அதிகமாயிருக்கும். இது தான் அவர் கண்ட முடிவு. 80,000 பள்ளிக்கூட பையன்களுடைய பரீட்சைப் புள்ளிகளையும் அவர்களுடைய உயரங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்தபின் இம் முடிவு கிடைத்திருக்கிறது. ஒரு பிள்ளையின் முதுகெலும்பின் நீளத்துக்கும் அதன் மூளைக்குமிடையில் ஏதோ ஒரு தொடர்பு இருக்க வேண்டுமென்று இந்த பேராசிரியர் அனுமானிக்கிருர்.

''நெட்டையனை நம்பினலும் கட்டையனை நம்பப்படாது,' என்பது தமிழ் பழமொழி, பல்லாயிரம் வருடத்து மாந்தர் அனுபவம் வடித்தெடுத்து தந்த இப் பழமொழியின் படிக்கு நெட்டையன் ஓர் அப்பாவி, ஏமாளி, சுலபமாக நம்பலாம் என்றுகிறது. ஆனல் கட்டையன் மூளையுள்ளவன், தந்திரசாலி, ஆகையால் நம்பப்படாது.

இந்தப் பழுத்த நம்பிக்கையை ஜப்பானிய பேராசிரியர் மாற்றி 'கட்டையனை நம்பினலும் நெட்டையனை நம்பபபடாது' என்றுக்கி விட்டாரே!

ஃ ஃ ஃ

உலகம் நிமிடத்துக்கு நிமிடம் வளருகிறது. நாளுக்கு நாள் மாறுதல்கள் ஏற்படுகின்றன. 30 ஆண்டுகளுக்கு முன் ஒரு சிசுவின் நீளம் 50 செண்டிமீட்டராக இருந்தது. இன்று பிறக்கும் சிசுக்களின் நீளம் 54 செண்டி மீட்டராம். அதாவது மனிதனின் சராசரி உயரம் அதிகரித்து வருகிறதென்பது அர்த்தம்.

நெட்டையர்கள் கட்டையர்களைவிட புத்தி கூர்மை உள்ளவர்களோ என்னவோ, நமக்கு ஏன் அந்த வம்பு. ஜப்பானியர் பொதுவாக கட்டையானவர்கள், அமெரிக்கர் பொதுவாக உயரமானவர்கள். இப்படியிருக்கும்போது நெட்டையர்

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனது முதலாவது ஜலவாயு குண்டை சீனு வெற்றிகரமாக வெடித்தது

## பல நாடுகளிலும் ஆழ்ந்த கவலை

புதுடில்லி, ஜூன் 18

**சீனு தனது முதலாவது ஜலவாயு குண்டை வெற்றிகரமாக நேற்று வெடித்திருக்கிறது. இச் செய்தி பரவியதும், இந்தியா உட்பட பல நாடுகள் தமது ஆழ்ந்த வருத்தத்தையும், கண்டனத்தையும் தெரிவித்தன.**

நேற்று சீனு வெடித்த ஜலவாயு குண்டு பற்றிக் குறிப்பிடுகையில், 'அணு ஆயுதங்களைப் பரிசோதனை செய்வதன் மூலம் சீனு தொடர்ந்தும் உலக அபிப்பிராயத்தை உதாசீனம் செய்து வருகிறது' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்தார்.

'அணுசக்தியை இத்தகைய நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

### யுதாண்ட் அறிக்கை

சீனுவின் குண்டு வெடிப்பு பற்றி ஐ.நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், 'எந்த நாட்டிலும்சரி, எந்த இடத்திலும், எந்தக் குண்டு வெடிக்கப்பட்டாலும், அது உலகின் கண்டனத்துக்குரியதாகும். அணு ஆயுதங்களைப் பரிசோதிப்பதைத் தடை செய்யும்நோக்கமாக ஐ.நா. பொதுச்சபை நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில், சீனுவின் இந்தக் குண்டு வெடிப்பு வருந்தத்தக்கதாகும்' எனக்குறிப்பிட்டுள்ளார்.

### பல நாடுகளில் கவலை

லண்டனில், பிரிட்டிஷ் அதிகாரிகள், சீனுவின்குண்டு வெடிப்புப்பற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர். அணுஆயுத தடைபற்றிய மாநாடு ஜெனீவாவில் நடைபெறும் இவ்வேளையில், சீனு இக்குண்டை வெடித்திருப்பது விரும்பத்தக்கதல்லவென அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

ஜப்பானும் தனது கவலையை வெளியிட்டுள்ளது. அத்துடன், சீனுவின் குண்டு வெடிப்பினுல் ஏற்படக்கூடிய அணுக்கதிர் வீழ்ச்சிக்கெதிரான பாதுகாப்புநடவடிக்கைகளையும் ஜப்பான்பலப்படுத்தியுள்ளது.

## ரஷ்ய-அமெரிக்க ஆதிக்கம் முறியடிக்கப்பட்டது

### சூ-என்-லாய் அறிவிப்பு

சீனு இப்போது வெடித்துள்ள குண்டு, அதன் ஆருவது அணு ஆயுதப் பரிசோதனையாகும். இக்குண்டு, மேற்குச்சீனுவில் வெடிக்கப்பட்டது.

'அணு ஆயுத உற்பத்தியில் ரஷ்ய-அமெரிக்கச் சர்வாதிகாரம் முறியடிக்கப்பட்டு விட்டது' என்று சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் கூறியுள்ளார்.

சீன ஜலவாயுகுண்டுவெற்றிகரமாக வெடித்துவிட்டது என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும், பீகிங்கிலும் ஏனைய நகரங்களிலும் சீன மக்கள் தெருக்களில் ஆடிப்பாடி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

### அமெரிக்கா ஊர்ஜிதம்

சீனு ஜலவாயு குண்டொன்றைவெடித்திருப்பது உண்மையேஎன அமெரிக்க அணு சக்தி கமிஷன் ஊர்ஜிதம் செய்துள்ளது. ஆனுலும், அமெரிக்காமீது ஒரு கடும் தாக்குதலை நடத்துமளவுக்கு தனது அணுசக்தியை வலுப்படுத்தகுறைந்தது இன்னும் எட்டு வருடங்களாவது சீனுவுக்காகும் என்ற தமது முந்திய கொள்கையை மாற்ற எதுவும் நடந்துவிட்டதாகக் கொள்ள முடியாதென அமெரிக்க அணுசக்தி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனுல், சீனுவிடம் அணுசக்தி ஏவுகணைகள்கூட இருப்பதாகச் சீன அதிகாரிகள் நேற்று உரிமை பாராட்டினர்.

சீனுவின் ஜலவாயு குண்டு பற்றி ரஷ்யப் பத்திரிகையான 'டாஸ்' எவ்விதகுறிப்புமின்றிச் செய்தியை வெளியிட்டிருந்தது.

### ஐ.நா.வில் கருத்து

ஐ.நா. வட்டாரங்களில், சீன ஜலவாயு குண்டுவெடிப்புப்பற்றிச் சில பிரதிநிதிகள் அபிப்பிராயம் தெரிவிக்கையில், உலக வல்லரசுகள் சம பலத்தில் இது ஒரு மாற்றத்தை உண்டாக்குமெனக் குறிப்பிட்டனர். வேறுசில பிரதிநிதிகள், இக்குண்டு வெடிப்பின்மூலம், வியட்னும் விவகாரத்தில் சீனு தனது நிலையை உறுதிப்படுத்த முயலலாம் என அபிப்பிராயம் வெளியிட்டனர்.

## துருப்புகளை இஸ்ரேல் வாபஸ் பெறவேண்டும்

### மண்டலசார்பற்ற நாடுகள்தீர்மானம்

நியுயோர்க், ஜூன் 18

மேற்கு ஆசியாவில் போர் ஆரம்பமாகுமுன்னர் இருந்த எல்லைகளுக்கு அதன் துருப்புகளை வாபஸ்பெறும்படி இஸ்ரேலைக் கோருவதென, ஐ. நா.விலுள்ள மண்டலசார்பற்ற நாடுகளின் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மண்டலசார்பற்ற பிரதிநிதிகள் இங்கு கூடிய பொழுது, இந்தியாவுக்கு அவர்கள் பாராட்டைத் தெரிவித்தனர். மேற்கு ஆசியா விவகாரத்தில் இந்தியா அனுசரித்து வந்துள்ள நிலையை அவர்கள் ஒரு மனதாகப் போற்றினுர்கள்.

இந்தியப் பிரதிநிதி பேசுகையில், 'மேற்கு ஆசியா விவகாரத்தில், அரபு நாடுகளிடம் நட்புறவு கொண்ட நாடுகள் பல, மண்டலசார்பற்ற நாடுகளிடையே இருக்குமென எமக்குத் தெரிந்தபோதும், நமக்கு முன்னுலிருக்கும் பிரச்னை அரபு நாடுகளுக்கு ஆதரவு அளிப்பதா, அல்லவா என்பதல்ல. அரசியல் சுதந்திரம், பிராந்திய சியாதீனம், தகராறுகளைத் தீர்க்கப் பலாத்காரத்தைப் பாவிக்காமை ஆகியனவே நாம் கருத்தில் எடுக்க வேண்டிய பிரச்னைகளாகும்.

### பாகிஸ்தான் முயற்சி பலிக்கவில்லை

மண்டலசார்பற்ற நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ளப் பாகிஸ்தான் எடுத்த முயற்சி வெற்றிதரவில்லை.

மேற்கு ஆசிய விவகாரத்தில் அரபு நாடுகளுக்கு ஆதரவான நிலையை அனுசரித்த ஏனைய நாடுகளையும் மண்டலசார்பற்ற நாடுகள் மகாநாட்டில் கலந்துகொள்ள அனுமதிக்கலாம் என சூ-என்-லாய் அபிப்பிராயம் தெரிவித்தது.

[5-ம் பக்கம் பார்க்க]

## இந்திய தூதரக அதிகாரி புதுடில்லி வந்து சேர்ந்தார்

புதுடில்லி, ஜூன் 18

சீனுவிலிருந்து கடத்தப்பட்ட இந்திய தூதரக அதிகாரிகளில் ஒருவரான திரு. ரகுநாத் நேற்றுப் பாலம் விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அங்கு அவர் பத்திரிகையாளரிடம் பேசுகையில், தாம் உளவு வேலைகளில் ஈடுபட்டதென்ற சீனுவின் குற்றச் சாட்டு வெறும் கட்டுக் கதையேயாகும்'' எனக் குறிப்பிட்டார்.

தான் பெருந்தொகை மக்களினுல் சுற்றி வளைக்கப்பட்டுத் தாக்கப் பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, அவரை வரவேற்கப் பாலம் விமான நிலையத்தில் பெருந்திரளான மக்கள் கூடிநின்றன.

## பீகிங்கில் ஆர்ப்பாட்டம்

பீகிங்கிலுள்ள இந்திய தூதரகத்துக்கு முன்னுல் ஆர்ப்பாட்டம் செய்த மக்கள், ஜன்னல்களை உடைத்தனர். தூதரகத்திலிருந்த கண்ணுடிப் பெட்டிகளையும் நொறுக்கி, அவற்றுடன் சேர்த்து இந்தியத் தலைவர்களின் கொடும்பாவிகளையும் எரித்தனர்.

இதற்கு முன்னர், ஆர்ப்பாட்டக் காரர்களின் முற்றுகையின் விளைவாக, இந்திய தூதரகத்தை சேர்ந்த அதிகாரிகளும் அவர்களது குடும்பத்தினருமாக மொத்தம் 60 பேர் சுதவடைக்கப்பட்டனர்.

### தமிழக பட்ஜெட்

சென்னை, ஜூன் 18

தமிழக சட்ட சபையில நேற்று முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை சமர்ப்பித்த 1967-68 க்கான பட்ஜெட்டில், 6 கோடியே 32 லட்சம் ரூபாய் துண்டு விழுந்துள்ளது.

பஸ்களைத் தேசிய மயமாக்கும் அரசாங்க முடிவையும் திரு. அண்ணுதுரை நேற்று, சபையில் வெளியிட்டார்.

---

### குவெயித்தில் அரபுநாடுகள் கூடின

குவெயித், ஜூன் 18

பதின்மூன்று அரபுநாடுகளின் வெளிவிவகார மந்திரிகள் குவெயித்தில் கூடியுள்ளார்கள்.

மேற்கு ஆசியாப் போரில் இழந்த அரபுப் பிராந்தியங்களை எப்படி மீட்பது என்பது பற்றியும், இஸ்ரேலுக்கு ஆதரவான நாடுகளுக்கு எண்ணைத்தடை விதிப்பது பற்றியும் அவர்கள் ஆராய்வார்கள்.

## 'அவசரப்பட்டு நாம் எதுவும் செய்யக்கூடாது'

### லோகசபையில் சாக்ளா

இவர்களுடைய விவகாரம் பற்றி நேற்று லோகசபையில் அங்கத்தவர்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரது பாதுகாப்புக்கும் இந்திய அரசாங்கம் உத்தரவாதமளிப்பதாக இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சாக்ளா உறுதியளித்தார்.

சீனு, இந்தியத் தூதரக உத்தியோகத்தர்களை நடாத்தும் முறை கண்டனத்துக் குரியதென்பதை ஒப்புக்கொண்ட திரு. சாக்ளா, ''கோபத்தினுல் ஏற்படும் அவசரத்தில் நாம் சீனுவுடனுன ராஜிய உறவுகளை முறித்துக் கொள்ளக் கூடாது'' என்று கூறினுர்.

### பலத்த காவல்

புது டில்லியிலுள்ள சீனத் தூதரகம், பொலிசாரால் பலத்த காவலுக்குள் வைக்கப்பட்டுள்ளது.

### கம்யூனிஸ்ட் தலைவர் கண்டனம்

இந்தியத் தூதர்களைச் சீனு நடத்தும் முறையை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் சாரியதரிசியான திரு. ராஜேஸ்வரராவ் வன்மையாகக் கண்டித்துள்ளார். 'சீனுவின் நடத்தை வெறும் பைத்தியக்காரத்தனமேயன்றி வெறுென்றுமில்லை'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்,

---

### ஐயாயிரம் ரூபாவுக்கு வசதியான வீடு

யாழ்ப்பாணம், திங்.

எந்த வித நிலத்திலும் அஸ்திவாரம் போட்டு வசதியான ஒரு சிமெந்திலான வீடு கட்டுவதற்கு ஐயாயிரம் ரூபா போதும். இவ்விதபுதிய முயற்சியிலீடுபட்டுள்ளது யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கட்டட நிர்மாண நிறுவனத்தினர்தான்.

புயல், வெள்ளப் பெருக்கினுல் பாதிக்கப்படாததாக இவ் வீட்டைஅமைப்பதற்கு நான்கு சாதாரண தொழிலாளர்கள் போதுமாம்.

### குரங்குச்சேஷ்டை!

உடுப்பிட்டி, ஞாயிறு

குரங்கொன்றின் சேஷ்டையினுல் நான்கு சிறுவர்கள் சென்ற வெள்ளிக்கிழமை அவதியுற்றனர். அல்வாய் தெற்கு மாயக்கை என்னுமிடத்தில் எங்கிருந்தோ தவறிவந்து சேர்ந்த பெரிய குரங்கொன்று வீதியால் பாடசாலை சென்றுகொண்டிருந்த நான்கு சிறுவர்களைத் துரத்தியதோடு அவர்களின் புத்தகங்களையும் பறித்து எறிந்ததாம். பின்னர் அயலிலுள்ள வீடொன்றினுள் புகுந்து அங்கேயிருந்த பொருட்களைச் சேதப்படுத்தவே வீட்டினர் பயத்தால் அலறினராம். இதனைத் தொடர்ந்து இப்பகுதி இளைஞர்கள் தடிகள், கயிறுகள் சகிதம் குரங்கைத் துரத்திப்பிடிக்க முயலவே பிரஸ்தாப குரங்கு அனைவரையும் ஏமாற்றி விட்டு எங்கேயோ ஓடி மறைந்துவிட்டது.

---

### ரூ. 200 அபராதம்

சாவகச்சேரி, ஞாயிறு

கனகரத்தினம் வரதலிங்கம் என்பவர் உத்தரவின்றிச் சாராயம் விற்ருரென சாவகச்சேரிப்பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைசெய்த சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ரூபா 200 அபராதம் விதித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூருக்கும் சென்னைக்கும்

சென்று திரும்பும் விமான டிக்கட்டுகளைப் பரிசாகப் பெறுங்கள். [அல்லது அதன் பெறுமதியான பணம்]

**அத்துடன் 10 ஆறுதல் பரிசுகள்**

முழு விபரங்களுக்கு கீழே கொடுக்கப்பட்டிருப்பதை வாசித்து தங்களுடைய பிரவேசங்களை இன்றே அனுப்பிவையுங்கள்.

சாளி! நான் கேட்டது இதுவல்ல!
ஜின் என்று சொல்லும் போது நான கேட்பது —



## மெஸ்தியா ஜின்னையே

ஏனென்றல் . . . . . . ? ?

1. புதிய மெஸ்தியா ஜின் இரு முறை வடிக்கப்பட்டது.
2. புதிய மெஸ்தியா ஜின் வெற்றி கண்டதோர் விசேஷ வெளிநாட்டு முறைப்படி தயாரிக்கப்படுவது.
3. புதிய மெஸ்தியா ஜின் மிகப் புதுமையான பிரெஞ்சு யந்திரங்களால் செய்யப்படுவது.
4. புதிய மெஸ்தியா ஜின்கள் [கலப்பற்றதும், தோடம்பழ ரஸம் கலந்ததும்] மென்மையானவை — வெண்பட்டும் மஞ்சள் ஊதாவும் — ஆ! அதுதான்!
5. புதிய மெஸ்தியா ஜின்தான் 'கொக்டெயில்' பானத்துக்கு சிறந்த அஸ்திவாரம். அதுமட்டுமல்ல, சாளி நீ நினைக்கமுடியாத 'கொக்டெயில்' எல்லாவற்றையும் அது உருவாக்கும்.
6. புதிய மெஸ்தியா ஜின் ரொம்ப ரொம்ப சுத்தமானது—வெறி அம்மல் என்பதே கிடையாது. ஆனபடியால்தான், மேனை சாளி, நான் ஜின் என்று சொல்லும் போது:

### புதிய மெஸ்தியா ஜின்னையே குறிப்பிடுகிறேன்

இங்கே காணப்படும் நமது நண்பர் உண்மையிலேயேரசித்து மதுவை அருந்துபவர். புதிய மெஸ்தியா ஜின்னை தாம் விரும்புவதற்கு ஆறு காரணங்கள் கூறியிருக்கிறார். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:— புதிய மெஸ்தியா ஜின்னை நீங்கள் விரும்புவதற்கு உங்களுடைய சொந்த காரணம் என்னவென்பதைஎழுதி புதிய மெஸ்தியா ஜின் போத்தல் லேபல் ஒன்றுடன் புதிய மெஸ்தியா போட்டி மே/பா. விஷன் விளம்பரங்கள் லிமிடெட்' 3-வது மாடி, மாக்கான்மரைக்காயர் கட்டிடம், கொழும்பு—1 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

எத்தனை சீட்டுகளாவது அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு சீட்டோடும் ஒருபுதிய மெஸ்தியா ஜின் லேபல் சேர்க்கப்படவேண்டும். **பன்னிரண்டு பரிசுகள் கொடுக்கப்படும். முதலாவது பரிசு சிங்கப்பூருக்குப் போய்வர ஓர் இலவச விமானடிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு. மிகக் கூடுதலான சீட்டுகள் அனுப்புபவருக்கு சென்னைக்குப் போய்வர ஓர் இலவச விமான டிக்கட் அல்லது அதற்குப் பெறுமதியான காசு.** ஒரு விசேஷ நீதிபதி குழுவின் தீர்ப்பே முடிவானது. ஸ்ரீலங்கா டிஸ்ரிலறீஸ் லிமிடெட், விஷன் விளம்பரங்கள் லிமிடெட் ஆகிய ஸ்தாபனங்களில் வேலை செய்வோரும் அவர்களுடைய குடும்பத்தினரும் இந்தப் போட்டியில் பங்குபற்றலாகாது. போட்டி முடிவு திகதி ஜூலை 31, 1967.

நான் மெஸ்தியா ஜின்னை விரும்புவதற்கு காரணம் ..............................

பெயர்: ..............................

விலாசம்: ..............................

நான் இத்துடன் .................... கூப்பனும்/கூப்பன்களும் .................... லேபலும்/லேபல்களும் இணைத்துள்ளேன்.


## வெடி விபத்தில் இளைஞன் மரணம

உடுப்பிட்டி, ஞாயிறு

சென்ற வியாழக்கிழமை பருத்தித்துறையில் நிகழ்ந்த பயங்கர வெடி விபத்தில் இளைஞனொருவர் கொல்லப்பட்டார்.

பருத்தித்துறை கொட்டடிப் பிள்ளையார்கோவிலுக்கு அண்மையில் வசிக்கும் சுப்பிரமணியம் சிவபாதலிங்கம் [வயது 22] என்னும் மீனவ இளைஞரே இவ் வெடிவிபத்திற்குப் பலியானவர் ஆவார். காலஞ் சென்றவர் தும்பளையைச் சேர்ந்த மைக்கேல் பஸிலப்பு என்பவரிடம் மீன் பிடித் தொழிலாளியாக வேலை செய்து வந்தாரென்றும், சம்பவத்தினத்தன்று காலை வெடி மருந்து தயாரித்துக் கொண்டிருக்கையில் தவறுதலாக வெடிமருந்தில் தீப்பற்றித் திடீர் என்று வெடித்ததினுல் உடலெங்கும் எரிகாயங்களுடன் அபாயகரமான நிலையில் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கேயே காலமானதாகவும் விசாரணையின் போது தெரிய வந்தது

பிரேத பரிசோதனை செய்த டாக்டர் விவேகானந்தன் சாட்சியமளித்தார். பருத்தித்துறைப் பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ் இராமநாதன் விபத்தில் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பு வழங்கினர்.

## சைக்கிள் திருட்டு
### மேலும் நால்வர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற சைக்கிள் களவுகள் சம்பந்தமாக மேலும் நால்வரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர். அண்மையில் இக்களவுகள் சம்பந்தமாக மூவர் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப்பொலிஸ் சார்ஜன்ட் திரு. கனகரத்தினம் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் இந்த நால்வரையும் கைதுசெய்தனர், கைதுசெய்யப்பட்டகொக்குவிலைச்சேர்ந்த கிளிஎனஅழைக்கப்படும் பாலுசெல்லத்துரை, பாலன் என அழைக்கப்படும் பொன்னுபாலசிங்கம், கந்தன்வல்லி, செல்லப்பா முத்துலிங்கம் ஆகிய நால்வரையும் இம்மாதம் 18ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கும்படி யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. மொகமட் ஜமீல் உத்தரவிட்டார் இவர்கள் களவாடியதாகச் சொல்லப்படும் ஒருசைக்கிளைபாழடைந்த கிணறுஒன்றிலிருந்தும், மூன்று சைக்கிள்களின் உதிரிப்பாகங்களை பற்றை ஒன்றிலிருந்தும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

(ந நி)

## உரும்பராய் பட்டின சபைத்தேர்தல்

புன்னலைக்கட்டுவன், ஞாயிறு

உரும்பராய் பட்டின சபைக்கான தேர்தல இம்மாதம் 28ம்திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்கான ஆயத்தங்களில் அபேட்சகர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

## புளியம்பொக்கணை கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், திங்.

புளியம்பொக்கணை கொலை முயற்சி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது நீதியரசர் வி. தென்னக்கோன் இவ் வழக்கை அடுத்த பருவகால விசாரணைக்கு ஒத்திப் போட்டார்.

இவ் வழக்கில் 65-ம் ஆண்டு டிசம்பர் 6-ம் திகதி புளியம்பொக்கணையில், தம்பையாசண்முகத்தை கொலை செய்ய முயற்சித்ததாகவும் செங்கோல் சவரிமுத்துவை காயப்படுத்தியதாகவும், கொச்சப்பு கிருஷ்ணன் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிக்காக அட்வகேட் எம். ஆலாலசுந்தரம் அரசாங்கத்தால் நியமிக்கப் பட்டிருந்தார். தற்பொழுது

[6-ம் பக்கம் பார்க்க]



சினிமா விமர்சனம்

## அண்ணாவின் ஆசை

தமிழ்ப் பட உலகில் இப்போது ஒரு புது விறுவிறுப்பு ஏற்பட்டுள்ளது. சமீப காலத் தமிழ்ப் படங்களைப் பார்ப்பவர்களுக்கு இது புலனாகும். 'அண்ணாவின் ஆசை'யும் இந்ததொடர்ச்சியில் ஒன்ருகவே இருக்கிறது.

பாத்திரத்துக்கேற்ற உருவ அமைப்பு, நல்ல காட்சிகள், நவீனம் இவற்றை நாம் 'அண்ணாவின் ஆசை' யில் காண்கின்ரேம்.

ஜெமினிகணேஷ் ரவியாக வரும் பாலாஜியின் அண்ணா. இந்த அண்ணாவின் ஆசை தனது தம்பியை ஒரு உயர்ந்தடாக்டராக்கவேண்டுமென்பது. இந்த ஆசையால் தன்னையே தற்கொலை செய்கிற அளவுக்கு அந்த அண்ணா சென்றுவிடுகின்ருன்.

ஏற்ற பாத்திரத்தை உணர்ந்து கௌரவமாக நடித்திருக்கிருர், ஜெமினி. தம்பி தனது காதலியை எட்டி எட்டிப்பார்க்கும் போது கிண்டல் பண்ணி மெல்லிசாகச் சிரிக்கும் போதும் மனைவிமேல்தான் வைத்திருக்கும் அளவற்ற அன்பை கண்களைக்கசக்கிக் கொண்டே வெளிப்படுத்தும்போதும் தனது மகளுடன் கொஞ்சும் போதும ஜெமினி நல்லதரமான நடிகர் என்பதை ஏற்றுக் கொள்ளச் செய்துவிடுகிருர்.

சாவித்திரி தாம் ஏற்ற அன்புள்ள ஓர் அண்ணி பாத்திரத்திற்கேற்ப கட்டுப்பாடாக இருக்கும் கட்டத்தில் கட்டுப்பாடாகவும் அன்புசொரியும் கட்டத்தில் அன்பைச் சொரிந்தும் நடித்திருக்கிருர். சாவித்திரிக்குப் பொருத்தமான பாத்திரம் பொருத்தமாகவே செய்திருக்கிருர். கணவன் இறந்துவிட்டான் என்று கேள்விப் பட்டுக் கதறும் கட்டம் கல்நெஞ்சையும் கரையவைக்கும் 'தேவதாஸை' சில கட்டங்களில் நினைவூட்டுகிருர் சாவித்திரி.

விஜயா- குளத்தில் நீந்துகிருர். குளத்தில் இல்லாத சமயத்திலும் குளிர்ச்சியாகவே இருக்கிருர்.

'அண்ணாவின் ஆசை' தயாரிப்பாளரான பாலாஜி தான் அருமையான தம்பியாக வருகிருர். ஏழையாக இருக்கும்போதிருப்பதை விட செல்வந்தராகியபின் அவரது நடிப்பில் ஒரு புது வேகத்தைக் காணமுடிகிறது. அண்ணியுடன் கோபிக்கும் கட்டத்தில்அருமையாக இருக்கிறது.

அழுது அழுது சிரிக்கவைக்கிருர் நாகேஷ். மருத்துவ மனையில் உடல் பரிசோதனைக்காகப் படுத்திருக்கும் அவரை டாக்டர் பரிசோதனை செய்யும்போது அவர் செய்யும் 'வேலைகள்'- பார்த்துப்பார்த்துச் சிரிக்கலாம். லேடீஸ் கிளப் பிரியையாகவும் அவரது மனைவியாகவும் வரும் மனேரமா நன்கு ஒத்துழைத்து நடித்திருக்கிருர். 'இஞ்சூர்' செய்து கொள்பவர்கள்தான் சாவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்ஏஜண்டுகளே[நாகேஷ் இன்சூரன்ஸ் ஏஜண்டாகத் தான் வருகிருர்] சாகிறதாக நான் கேள்விப்படவில்லையே' என்று சொல்லி அழும் கட்டம் அவரது ஒத்துழைப்பில் ஒன்று!

சகோதரபாசத்தை விரும்புபவர்களும் நல்லபடியாகப் பொழுதைப்போக்க ஆசைப்படுபவர்களும் அண்ணாவின் ஆசையை தாராளமாகப் பார்க்கலாம். இப்படம் இப்போது யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டரில் திரையிடப்பட்டுள்ளது.

—கணேஷ்


### இதோ, இன்னொரு சந்தர்ப்பம்

பொது மக்கள் வேண்டுகோளுக்கிணங்க

## 'மெஸ்தியா போட்டி'

1967 ஜூலை 31-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளமபரம்

**லொறி ஒப்பந்தம்**

தென்மராட்சி மேற்கு பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு லொறி மூலம் பொருட்களை ஏற்றி இறக்க விண்ணப்பங்கள் 27-6-67-ந் திகதிவரை ஏற்கப்படும்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபா 10/- கட்டி சமாசக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர் ரூபா 500/- கட்டி ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். சகல விபரங்களையும் சமாசத்தில் அறிந்துகொள்ளலாம்.

இ. வேலாயுதர்
கைதடி. காரியதரிசி
2362

**கோழித் தீன்**

முட்டையிடும் கோழியை திடமாக வைத்திருக்க, முட்டையிட்டு ஓய்ந்த கோழியை முட்டையிடச் செய்ய

- குஞ்சுகளுக்கு
- வளரும் கோழிகளுக்கு
- வளரும் சேவல்களுக்கு

சுத்தமான, நம்பிக்கை வாய்ந்த கோழித்தீன்.

விநியோகிப்பவர்கள்

**எஸ். சேனதிராசா**
கல்லூரி வீதி,
நெல்லியடி.

**அருணா ஏஜன்ஸீஸ்,**
அளவெட்டி.
2355

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி—பத்மினி
நடித்த
**தூக்கு தூக்கி**
[புதிய கொப்பி]

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ
நடித்த
**தங்கத் தம்பி**

**REGAL - JAFFNA**
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
**THE SPY WITH MY FACE**

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
தினசரி 6-30, 9-45
ஜெமினி, நாகேஷ்வரராவ்
சாவித்திரி
நடித்த
**மனிதன் மாறவில்லை**

2-வது வெற்றி வாரம

**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **ஈரோஸ்** [பாம்பன்கடை]
தினசரி பி. ப. 2, மாலை 6-00, இரவு 9-30 மணிவரை
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணா** [திருமலை] **மொடேர்ன்** [பதுளை]
**மொடேர்ன்** [பண்டாரவளை] **விஜிதா** [ஹட்டன்] **தீவொளி** [நுவரெலியா]
**கல்யாணி** [நாவலப்பிட்டி]
ஆகிய திரைகளில்
தென்னக திரைப்பட வரலாற்றின் மகத்தான வெற்றிச் சித்திரம் ... இது மக்களின் ஒருமித்த தீர்ப்பு!
தாய்க்குலத்தின் இதயத்தைத் தொட்டுவிட்ட தன்னிகரற்ற செல்வம்!!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசனை சென்ற ஆண்டின் சிறந்த நடிகராக்கியது செல்வம்!!!
நடிக மன்னன் **சிவாஜி கணேசன்,**
நடிக ராணி **கே. ஆர். விஜயா,**
**ரங்கராவ், சகஸ்ரநாமம், வி. நாகையா,**
**நாகேஷ்**



வி. கே. ஆர். பிக்சர்சின்

# செல்வம்


சுண்டிக்குளி விளையாட்டுப் போட்டி

# சரோஜினி, கல்யாணி, மீனு சம்பியன்கள்

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் 133 புள்ளிகளைப் பெற்ற கார்ட்டர் இல்லம் முதலிடத்தைப் பெற்றது. மற்றும் பேஜ் இல்லம் 1171/2 புள்ளிகளும், ஹோப்பர் இல்லம் 981/2 புள்ளிகளும், குட்ஷைல்ட் இல்லம் 96 புள்ளிகளையும் முறையே பெற்றன.

மேற்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் செல்வி எம். வை. முத்தையா தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் கீழ்ப்பிரிவில் சரோஜினி நடராசாவும், மத்திய பிரிவில் கல்யாணி நடராசாவும், மேற்பிரிவில் மீனு இராஜசிங்கமும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். பரிசு பெற்ற வீராங்கனைகளுக்கு செல்வி எம். வை. முத்தையா பரிசில்களைவழங்கினார். சரோஜா நடாராசாவும், மீனு இராசசிங்கமும் முறையே நீளம் பாய்தல், 200 யார் ஓட்டம் ஆகிய போட்டிகளில் திறமையான விளையாட்டு வீராங்கனைகள் என்பதற்குரிய பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இப் போட்டிகளின் முடிவுகள் சில பின்வருமாறு-:

கீழ்ப்பிரிவு கிரிக்கெட் பந்தெறிதல்: ஜெயந்தி, ஜெயராணி, காமினி. மத்திய பிரிவு பரிதி வட்டம்வீசுதல்: ஜெயந்தி, சாந்தநாதினி, சாளற். மேற்பிரிவு: மனோரஞ்சிதம், விமலா, யோகராணி. மத்தியபிரிவு குண்டெறிதல்: செல்வராணி நிருபா, சாளற். மேற்பிரிவு. ரதி, விமலா, பிரபா கீழ்ப்பிரிவு உயரம் பாய்தல்: சாந்தினி, நிர்மலா, சித்திரா. மத்தியபிரிவு; மாலினி, அன்னராணி, செல்வராணி. மேற்பிரிவு: இந்திராணி, செல்வமதி, பத்துனுநிதி. கீழ்ப்பிரிவு: நீளம் பாய்தல்: சரோஜினி, இன்பஜோதி, சித்திரா. மத்தியபிரிவு தடை ஓட்டம்: தயாளினி, சுலோஜனா. மேற்பிரிவு: தேவி, யோகேஸ்வரி, சந்திர லீலா. கீழ்ப்பிரிவு; 100 யார் ஓட்டம்- சரோஜினி, இன்பஜோதி, மாலினி.

வலி. வடக்கு

# சுகாதாரவிழாப் போட்டியில் வெற்றிபெறும்பாடசாலைகள்

உடுவில், ஞாயிறு

வலிகாமம் வடக்குப் பிரிவு சுகாதார விழாவையொட்டிய போட்டிகள் உடுவில் கிராம சபைதிறந்த வெளியரங்கில் உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது. வெற்றி பெற்றோர் விபரம் பின்வருமாறு:-

சுகாதாரப்பேச்சுப் போட்டி- [கீழ்ப்பிரிவு]) சேர். கனகசபை வித்தியாலயம், பன்னாலை, நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை தமிழ்க்கலவன் பாடசாலை தாவடி. [மேற்பிரிவு] வீமன்காமம் ஆங்கிலப்பாடசாலை, வீமன்காமம், சேர். கனகசபை வித்தியாலயம், பன்னாலை, முருகமூர்த்தி வித்தியாலயம் உடுவில்,

பாட்டுப்போட்டி கீழ்பிரிவு வீமன்காமம்ஆங்கில பாடசாலைவீமன்காமம் அமெரிக்க மிஷன் தமிழ்பாடசாலைஇணுவில், அருணாசல வித்தியாலயம், அளவெட்டி. [மேற்பிரிவு] அருணாசல வித்தியாலயம், அளவெட்டி, தமிழ் கலவன்பாடசாலைதாவடி, மயிலிட்டிறோமன் கத்தோலிக்க பாடசாலைகாங்கேசன்துறை

[கீழ்ப்பிரிவு:] வீமன்காமம் ஆங்கிலப்பாடசாலை, வீமன்காமம், அருணாசல வித்தியாலயம், அளவெட்டி, அமெரிக்கன்மிஷன் பாடசாலை, ஏழாலை வடக்கு.

[மேற்பிரிவு]: மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை, காங்கேசன்துறை.

நாடகப்போட்டி: றோமன் கத்தோலிக்க பாடசாலை மயிலிட்டி, தமிழ்க் கலவன் பாடசாலை தாவடி, சேர் கனகசபை வித்தியாலயம், பன்னாலை.

பாடசாலைகளுக்கான தோட்டப் போட்டி: சேர் கனகசபை வித்தியாலயம் பன்னாலை, சைவப்பிகாச வித்தியாசாலை இணுவில், வீமன்காமம் ஆங்கில பாடசாலை வீமன்காமம்.

வீட்டுத்தோட்டப் போட்டி: திரு. கே. திருஞானசம்பந்தர் காங்கேசன்துறை, திரு வி. கணேசலிங்கம், பன்னாலை.

கிராமப்புற பயிர்ச் செய்கைப் போட்டி இளம் வாலிபர் அபிவிருத்திச் சங்கம், காங்கேசன்துறை.

## துருப்புக்களை . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால், நடுநிலைமைக் கொள்கையை அனுசரிக்கும் மண்டலசார்பற்ற நாடுகள் மத்தியில் ராணுவக் கூட்டுகளில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளை அனுமதிக்க முடியாதென மாலி வற்புறுத்தியது.

மாலியின் ஆலோசனையை இந்தோனேஷியா, இந்தியா, தான்ஸானியா ஆகிய நாடுகள் ஆதரித்தன. சூடானின் ஆலோசனைக்கும் அரபு நாடுகள் சில ஆதரவு தெரிவித்தன.

**அமெரிக்க கோரிக்கை**

முன்னதாக ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பேசிய அமெரிக்கப் பிரதிநிதி, திரு. கோல்ட்பேர்க், இஸ்ரேலை அதன் துருப்புகளைப் பழைய எல்லைகளுக்கு வாபஸ் பெறுமாறு கோரும் தீர்மானத்தை விவாதிப்பது என்று நிகழ்ச்சிநிரலில் குறிப்பிட்டிருப்பதற்குப் பதிலாக மேற்கு ஆசிய விவகாரத்தை முற்று முழுதாக விவாதிக்க வேண்டுமெனக் கோரினார்.

அமெரிக்கப் பிரதிநிதியின் இந்த ஆலோசனையை, சவுதி அரேபியப் பிரதிநிதி வன்மையாகக் கண்டித்தார். நிகழ்ச்சிநிரல் மாற்றப்படுவதை அனுமதிக்கச் சபை மறுக்கவேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்.

சபைத்தலைவர், தகராறு இல்லாமல் விவாதத்துக்கான தீர்மானத்தை முடிவுசெய்யுமாறு அங்கத்தவர்களைவேண்டிக்கொண்டார். பின்னர், இந்தியா விடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக, அமெரிக்கா தனது முன்னைய [illegible] டது.

## விளையாட்டுப் போட்டி

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை புனிதஹன்றியரசர் கல்லூரி விளையாட்டுப் போட்டிகள் ஜூலை 15-ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தகம்:
மூன்றே மாதத்தில் இலக்கண முறையில் ஆங்கிலம் கற்றுக்கொள்வதற்கு வகுக்கப்பட்ட நூல் Rs. 1-50, P. V. D. ஞானராஜ், த. பெ. எண் 357, கொழும்பு. 1895

லொறி
நல்ல நிலைமையிலுள்ள ஒஸ்டின் டீசல் [மொக்கன் மொடல்] லொறி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: விக்ரேஸ், 6, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 2439

மோட்டார் சைக்கிள்
EY 9000 தொடர் இலக்கம் உடைய B.S.A. 3.5 மோட்டார் சயிக்கிள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: ச. ச. ஸ்ரீஸ்கந்தராசா, ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம். 2450

காணி
யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 395-ம் இலக்கத்திலுள்ள காணியில் இரண்டு பரப்பு விற்பனைக்கு உண்டு. 2455

தென்னந்தோட்டம்
பூநகரி மெயின் வீதியில், பரம்பன்கிராயிலிருந்து 1 1/2 மைல் தூரத்தில் மேற்குப் பகுதியில் வெட்டுக்காடு என்ற இடத்தில் 23 ஏக்கர் காட்டுடன் கூடிய 30 ஏக்கர் பலனளிக்கும் தென்னந்தோட்டம் [மொத்தம் 53 ஏக்கர்] விற்பனைக்குண்டு. தோட்டம் வரையும் வாகனங்கள் போகக்கூடிய வசதியுள்ளது. விலை மற்றும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். இல. 59, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 2452

### தேவை

வேலை
ஐரோப்பிய ஸ்தாபனமொன்றில் கணக்குப் பகுதியில் 16 வருடங்கட்குமேல் கடமையாற்றி, வர்த்தகத் துறையில் அனுபவமுள்ளவர், லிகிதர், காஷியர், ஸ்ரோர்கீப்பராக அல்லது வான் சேல்சில் கடமையாற்ற விரும்புகிறார். உறுதிப்பிணை கட்டலாம். விபரங்களுக்கு விளம்பர இல. 2451 ஈழநாடு, மே/பா த. பெ. எண். 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2451

பாண், பிஸ்கட் தயாரிப்பவர்
பாண், பிஸ்கட், கேக் முதலியன தயாரிக்கத்தெரிந்த பேக்கர்மார் விண்ணப்பிக்கவும். மு. இராசரத்தினம், இலட்சுமி பேக்கரி, அச்சுவேலி. 2453

விற்பனையாளர்
அலுமினியப் பாத்திரங்கள், சாய்ப்புசாமான்கள் விற்பனை செய்வதில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். மு. இராசரத்தினம், ஸ்ரீ முருகேசு ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, மாவிட்டபுரம். 2454

### TO LET

House
Commodious Bungalow with 4 Bedrooms, attached Bathrooms and Garage etc. Electricity Water service, and Drainage Close toStanley College and Vigneswara Vidalaya Inquire from Mrs S. K Nalliah, 338 A, Navalar Road, Nallore South 2449


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கல்லெறிபவரை கண்டுபிடிக்க பொலிஸார் வீட்டுக்கு வந்தனர்'

### உடுவில் கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், திங்கள்

"எங்கள் வீட்டிற்கு எதிரி கல்லால் எறிவது பற்றி பொலிசில் புகார் செய்தேன். கல்லெறிபவரை பிடிக்க பொலிசார் எனது வீட்டில் வந்து பதுங்கியிருந்தனர். எதிரி தான் கல்லெறியவில்லையென பொலிசாருக்கு சத்தியம்செய்தார். சத்தியம் செய்யும்போது நானும் கோவிலுக்குச்சென்றேன்."

உடுவில் கொலைமுயற்சி வழக்கு நேற்றுக்காலை மூன்றாவது தினமாக வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது இறந்தவரின் தாயார் தெய்வி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் 65-ம்ஆண்டு டிசம்பர் 2-ம் தேதி உடுவிலில் வல்லி ஐயம்பிள்ளையை தவசி கந்தையா கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் ஆஜரான புறக்டர் ஏ. அன்ரனி குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது: நான் குளறிய சத்தத்திற்கு அயலவர்கள் வந்திருந்தால் எதிரி கல்லெறிவதை கண்டிருக்கமுடியும். பொலிசார் வந்துபடலையில் நின்று விசாரணை செய்துவிட்டுப் போவார்கள். இரண்டு மூன்று தரம் பொலிசார் வந்தனர்.

நீதியரசர்: பொலிசார் வந்து உனது வீட்டிற்குள் பதுங்கியிருந்தார்களா?- இல்லை.

நீதியரசர்: 2 நிமிடத்துக்குள் பொலிசார் வந்து பதுங்கியிருந்தார்கள் என்று கூறினீரல்லவா?-ஒழுங்கைக்குவந்து விசாரணை செய்துவிட்டுப் போனார்கள்.

வழக்: வீட்டு வளவிற்குள் பொலிசார் வரவில்லை— இல்லை.

வழக்: வீட்டில் உடைந்த கூரையை பொலிசாருக்குக் காட்டினீரா?—ஆம்.

நீதி: இந்த வழக்கைத் தவிர வேறு வழக்குச்சம்பந்தமாக கோர்ட்டுக்குப்போயிருக்கிறீரா!— ஞாபகமில்லை.

ஜூரி: கிராமக் கோர்ட்டு வழக்குக்குப் போகவில்லையா?—இல்லை.

நீதி: காணி வழக்குக்குப் போனீரா?—இல்லை.

நீதி: பங்குக் கிணறு வழக்குக்குக் கோர்ட்டிற்குப் போனீரா?—இல்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

ரயிலில் இறந்து கிடந்த

## தர்மராஜாவின் மரணம் பற்றி மேலும் புதிய தகவல்கள்

### 4 பெண்களை பொலிஸார் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற புகையிரதத்தில் இறந்து கிடந்த தர்மராஜா என்பவரின் மரணம் சம்பந்தமாக பல புதிய தகவல்கள் வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்குக் கிடைக்கத் தொடங்கியுள்ளன.

தற்போது சண்டிலிப்பாயில் சிவபாதம் என்பவருடன் வசித்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் தங்கம்மா என்பவர் மரணமான தர்மராஜாவின் மனைவியே என்றும் தர்மராஜாவும், தங்கம்மாவும் இந்தியாவைச் சேர்ந்தவர்களென்றும், கதிர்காமத்தில் குடும்பமாக வசித்துவந்தார்களென்றும் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டனுக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது.

சம்பந்தப்பட்ட சிவபாதத்தின் சகோதரரான சிவஞானம் என்ற ஒய்வுபெற்ற புகையிரதப்பகுதி ஊழியர் ஒருவரைக் கண்டுபிடிப்பதில் பொலிஸார் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளனராம். இவர் அண்மையில் சண்டிலிப்பாய் ஐயனார் கோவிலில் நடைபெற்ற விக்கிரகக் களவு ஒன்று சம்பந்தமாக மல்லாகம் நீதிமன்றத்தில் இதுவரை ஆஜராகாது தலைமறைவாக விருப்பதாகப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவபாதம், சிவஞானம், செல்லத்துரை உட்பட இன்னும் பலரைக்கொண்ட ஒரு கோஷ்டியினரே தர்மராஜாவைக் கொலைசெய்திருக்கலாமென்றும் இவர்கள் இதற்கு முன்னர் 5 கொலைகளைச் செய்துள்ளனரென்றும் பொலிஸாருக்குக் கிடைத்துள்ள இரகசிய தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது. இது சம்பந்தமாக 4 பெண்களையும் பொலிஸார் தற்போது தேடிவருகின்றனர். புலன் விசாரணைதொடர்ந்து நடைபெறுகின்றது. [ந. நி.]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூன் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அங்கவீனர்களை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஞாபகார்த்தக் கட்டிடமான இந்த மண்டபம் தற்போது அங்கவீனர்கள் வசிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் இம் மண்டபத்திலிருந்து அவர்களை வெளியேற்றினால் அவர்கள் குடியிருக்க வேறு கட்டிடம் இல்லாததினால் அவர்களை வெளியேற்ற வேண்டாமெனக் கோரி அரசாங்கத்திற்கு மகஜர் சமர்ப்பிக்கவே பொதுமக்களிடம் கையெழுத்துச் சேகரிக்கப்படுகின்றது. பிரதமர், சமூகசேவை மந்திரி, சுகாதார மந்திரி ஆகியோருக்கு இம் மகஜர்கள் அனுப்பி வைக்கப்படுமெனத் தெரிகின்றது.

[ந. நி.]

## நாட்டிலும நகரிலும

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் புத்திக் கூர்மை அதிகமானவர்கள் என்று ஒரு ஜப்பானியர் கூறுவது தமது இனத்துக்கே இழிவு என்பதை பேராசிரியர் சிந்தித்துப் பார்க்கவில்லை போல தெரிகிறது.

எப்படியிருந்தாலும், நெட்டையர்கள் சீவியம் கொஞ்சம் கஷ்டமானது தான். மேசை, கதிரை, கட்டில், கட்டில் விரிப்பு, உடை எல்லாமே நெட்டையர்களுக்கு அதிக செலவைக் கொடுக்கிறது. பாவம், ஒரு நாளைக்கு எத்தனை தடவை அவர்களுடைய மண்டையை வீட்டு வளையை பதம்பார்க்கிறது!

—வழிப்போக்கன்.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனம்

### திங்கள் 19-6-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்புகள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 பாட்டு—தேவகி குமாரசாமி, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 விவேகச்சக்கரம், 7-45 தமிழ் மூலம் சிங்களம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர் விருப்பம்.

## இளம பெண் தற்கொலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அளவெட்டியைச் சேர்ந்த தம்பிராசா பூபாலசிங்கம் வியாகேஸ்வர் என்ற 23 வயது பெண் மணி கிருமிநாசினி குடித்து தற்கொலை செய்துகொண்டார். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என் ராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார். மரணமானவரின் வயிற்றில் கிரிமிநாசினியும், 6 மாதக் குழந்தையொன் இருந்ததாக பரிசோதனை நடத்திய டாக்டர் எஸ். சுப்பிரமணியம் கூறினார். காலமானவரின் கணவரும் சாட்சியமளித்தபின் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## புதிய நிர்வாகிகள்

பூநகரி, ஞாயிறு

பூநகரி அத்தாய் இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம் திரு. மு. செல்லையா தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர் திரு. மு. செல்லையா, உபதலைவர் திரு. வ. சோமசுந்தரம், காரியதரிசி திரு. க. ஆறுமுகம், உபகாரியதரிசி திரு. சி. கதிரவேலு, தனாதிகாரி திரு. க. அம்பிகைபாகன். ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## நகரசுத்தி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சுன்னாகம் பட்டினசபை நகரசுத்தித் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. முருகன், பட்டினசபைத்தலைவர் திரு. பொ. நாகலிங்கம், பட்டின சபைக் காரியதரிசி ஆகியோர் கலந்துகொண்டனர்.

வேலை நிறுத்தம் செய்த பதினைந்து தினங்களில் எட்டு நாட்களுக்குரிய சம்பளம் கொடுப்பதற்கு பட்டினசபையின் கூட்டத்தைக் கூட்டி அதன் அனுமதியைப் பெற்றுக் கொண்டு உள்ளூராட்சி மன்றச்சபையின்அங்கீகாரத்துக்கு அனுப்புவதாகவும் வேலை நிறுத்தத்திலீடுபட்டவர்கள் பழிவாங்கப்படமாட்டார்களென்றும், வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு நியாயமான அளவு முற்பணம் கொடுத்து சம்பளத்தில் கழிக்கவும் பட்டின சபைத் தலைவர் ஒப்புக் கொண்டார்.

## 2 ஆண்டுக்கு 2 லட்சம

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த சுமார் 15 ஆண்டுகளுக்கு மேல் இந்திய வம்சாவழியினர் இந்நாட்டில் வேண்டத் தகாதவர்கள் போல் நடத்தப்பட்டுவந்திருக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் வசதியான வாழ்க்கை கிடைக்குமானால் கூடியவிரைவில் ஏராளமானவர்கள் திரும்பிவிடச் சித்தமாயிருக்கிறார்கள். செலாவணி வசதிகள் மட்டும் செய்து கொடுக்கப்படுமானால் 5 லட்சத்து 25 ஆயிரம் பேரும் 5 ஆண்டுகளுக்குள்ளேயே திரும்பிவிடுவார்கள் என்று என்னால் உறுதியாகச் சொல்லமுடியும் என்று திரு. யேசுதாசன் கூறினார்.

1954ம்ஆண்டுக்கும் 1960ம் ஆண்டுக்கும் இடையில் 44,239 இந்திய வம்சாவழியினர் தம்மிச்சையாகவே இந்தியாவுக்குத் திரும்பியுள்ளனர். 1961ம் ஆண்டுக்கும் 1963 ஆண்டுக்குமிடையில் 13,782பேரும், 1964ல் இருந்து 1965 ஏப்ரல் 31ந் திகதிக்குள் 15,410 பேரும் தாமாகவே இந்தியாவுக்குத் திரும்பியுள்ளார்கள் என்று செனட்டர் யேசுதாசன் கூறினார். இந்தியாவுக்குத் திரும்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும்வரை ஏராளமானவர்கள் இப்போது காத்திருக்கிறார்கள் என்று தாம் முழுப் பொறுப்போடுதான் பேசுவதாகவும் இந்தியாவுக்குத் திரும்ப விரும்பும் மக்களுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உதவுமென்றும் திரு. யேசுதாசன் கூறினார்.

## எதிர்த்து வாக்களித்துவிட்டு ராஜினமா செய்வாராம்

### செனட்டர் மாணிக்கம மீண்டும வற்புறுத்து

கொழும்பு, ஞாயிறு

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுல் மசோதாமீது இன்று செனட்டர் மாணிக்கம் பேசுகையில் ஜூலை 8ந் திகதிக்குப் பின் சபையில் பேசும் நிலை தமக்கு ஏற்படாதென்றும், இந்த மசோதாவை எதிர்த்து வாக்களித்தபின் தாம் ராஜினமா செய்யப் போவதாகவும், இந்திய வம்சாவழியினர் கட்டாய நாடுகடத்தலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்பதாலேயே தாம் ராஜினமா செய்யப்போவதாகவும் கூறினார்.

ஒப்பந்தத்தின்படி 5 லட்சத்து 25 ஆயிரம் பேர் இந்தியா திரும்பவேண்டுமென்றும், அப்படி எவரும் விரும்பாதபட்சத்தில் அவர்கள் கட்டாயமாக நாடுகடத்தப்படக்கூடிய நிலைமையிருப்பதாகவும் செனட்டர் மாணிக்கம் கூறினார்.

தமிழரசுக்கட்சியினர் இந்திய வம்சாவழி மக்களைக் கைவிட்டுவிட்டதாகவும், முன்னர் தமிழரசுக்கட்சி ஒப்பந்தத்தை நிராகரித்ததென்றும் இப்போது ஆதரிக்கிறதென்றும் அவர் கண்டித்தார்.

## மாணவர் தரம் பிரிப்பது கட்டாயமல்ல

### ஆனல் அரசாங்கம ஆலோசனை கூறும

கொழும்பு, ஞாயிறு

எட்டாம் வகுப்பிலிருந்து தொழிற் கல்வியா, விவசாயக் கல்வியா, உயர்கல்வியா என மாணவர்களைத் தரம் பிரிப்பதில் கட்டாயம் எதுவுமிருக்கமாட்டாது. ஆனால் மாணவர் ஒருவரின் திறமையையும் தகுதியையும் கணித்து அவர் எந்தத் துறையில் சிறந்து விளங்குவார் என்பது பற்றியும் அந்த மாணவர் எந்தத் துறைக் கல்வியைப் பெறலாமென்பதுபற்றியும் அரசாங்கம் மாணவருக்கும் பெற்றருக்கும் ஆலோசனை கூறும்.

இந்த ஆலோசனையைத் தட்டிக்கழித்து உயர் கல்வி படிக்க விரும்புவோர் இரண்டு வருடங்களில் பொதுத் தராதரப் பத்திர [சாதாரண]ப் பரீட்சையில் சித்தி பெறத்தவறினால் பாடசாலையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

கல்வி வெள்ளையறிக்கைப்படி 8-ம் வகுப்பிலிருந்து மாணவர்கள் தொழிற் கல்வி, உயர் கல்வி எனத் தரம் பிரிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## புளியம் பொக்கணை...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெற்றுவரும் அசைஸ் விசாரணைகள் இம்மாதம் 20-ம் திகதியுடன் முடிவடைகிறது. இரண்டாவது பருவகால விசாரணை ஜூலை மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வியாபாரம பெருக விளம்பரம செய்க

## மரண அறிவித்தல்

### கா. விசயரத்தினம் (விசயம்)

நீராவியடியைச் சேர்ந்த திரு. கார்த்திகேசு விசயரெத்தினம் [விசயம்] அவர்கள் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். திருமதி சரஸ்வதியின் அருமைக் கணவரும், திரு. வி. இராசரத்தினம் [நீர்ப்பாசன இலாகா], திரு. வி. சண்முகநாதன் [அந்திய காலச் சகாயநிதிச் சங்கம், வண்ணார்பண்ணை], திரு. வி. மகாலிங்கம் [பிலிப்ஸ் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்] திருமதி இ. அசலாம்பிகை, செல்வி கமலாம்பிகை [பல்கலைக் கழகம், பேராதனை], செல்வி ஞானம்பிகை [வசந்தா சேலை அச்சகம், நீராவியடி] ஆகியோரின் தந்தையாரும், திரு. கா. இராசரெத்தினத்தின் சகோதரரும், திரு. அ. இராஜகுலசிங்கம் [நில அபிவிருத்தி இலாகா, திருகோணமலை], திருமதி இ. யோகவதி, திருமதி ச. தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு, கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்

2/1, முதலாம் ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.

2365

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org